**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 55 of 2023

Depositions of PW - 3 witness for ________ Prosecution / Defence / Court

Name : சந்திரன்

Father's Name : மாறன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of November** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது காங்கேயம்பாளையத்தில் வசித்து செருப்பு தைக்கும் வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த ரங்கன் என்னுடைய சித்தப்பா ஆவார். கடந்த 01.02.2023 ம் தேதியன்று இரவு 07.10 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எங்கள் ஊரை சேர்ந்த அசா.2 பெருமாள் என்பவர் எனக்கு போன் செய்து ரங்கன் என்பவருக்கு காங்கேயம்பாளையம் முருகன் மெடிக்கல் அருகே விபத்து ஏற்பட்டு அவருக்கு தலையில் அடிபட்டு மூச்சு பேச்சு இல்லாமல் இருப்பதாகவும் கூறியதன் பேரில் நான் என் அம்மாவை அழைத்து கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றேன்.

2. சம்பவ இடத்தில் சென்று பார்த்தபோது ரங்கன் தலையில் பலத்த அடிப்பட்டு பேச்சு மூச்சு இல்லாமல் இறந்த நிலையில் கிடந்தார். விபத்து குறித்து பெருமாள் என்பவரிடம் விசாரித்தபோது சம்பவ தினத்தன்று இரவு 07.00 மணிக்கு ரங்கன் திருச்சி - கோவை ரோட்டை சைகை காட்டி

நடந்து கடக்கும்போது அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த அசோக் லைலேண்ட் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். அதனால் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். போலீசார் ரங்கன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மோகன்ராஜ் எனது மகன். பெருமாள் எனது அண்ணன் மகன். பெருமாள் அவர்களுக்கு சம்பவத்தில் இறந்த ரங்கன் தாத்தா முறையாகும். வீரம்மாள் பாட்டி முறையாகும். வீரம்மாள் அவர்களை நான் தான் தற்பொழுது பராமரித்து வருகிறேன். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.20 19:46:15 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**